1972 நவம்பர் 13]

State Industries Promotion Corporation of Tamil Nadu Limited.

*283 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the details of the feasibility study undertaken by the State Industries Promotion Corporation of Tamil Nadu Limited for the years 1970–71 and 1971–72, and

(*b*) the action taken thereon?

தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம்

திரு வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) தமிழ் நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தால் (State Industries Promotion Corporation of Tamil Nadu Limited) 1970–71, 1971–72-ஆம் ஆண்டுகளுக்கான தொழில் வாய்ப்புகள் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் விவரங்கள் யாவை?

(இ) இதையொட்டி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தால் 1970-71, 1971-72-ம் ஆண்டுகளில் தொழில்களுக்கான வாய்ப்புக் கூறு அறிக்கைகள் எதும் தயாரிக்கப்படவில்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

Mechanised Brick Plant.

*284 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state when the Mechanised Brick Plant with Czechoslovakian Collaboration will go into production?

இயந்திர செங்கல் தொழிற்சாலை

திரு வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

செக்கோஸ்லோவாகியா நாட்டின் உடனுழைப்போடு தொடங்கிய இயந்திர செங்கல் தொழிற்சாலை எப்போது உற்பத்தியைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செக்கோஸ்லோவாகியா நாட்டின் கூட்டுறவுடன் அமைக்கப்படும் அரசாங்க செங்கல் தொழிற்சாலை, 1974-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் உற்பத்தி தொடங்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Prosecutions against bus crew and others

* 285 Q.—Thiru V. ISVARMURTI : Will the Hon. the Minister for Transport be pleased to state the details of the prosecutions launched against

(1) the bus crew; and

(2) third parties, during 1969–70 and 1970–71?

பேருந்து வலவர்கள், பயணித் துணைகள் முதலியோருக்கெதிராக தொடரப்பட்ட வழக்குகள்

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

1969-70, 1970-71-ம் ஆண்டுகளில் (1) பேருந்து வலவர்கள், பயணித் துணைகள் (2) மூன்றும் நபர்கள் ஆகியோருக்கெதிராக தொடரப்பட்ட வழக்குகளின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

	1969–70	1970–71
பேருந்துப் பணியாளர்களுக்கெதிராகத் தொடரப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை.	4891	5759
மூன்றுமவருக்கு எதிராகத் தொடரப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை	2639	3159